சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.39/2021**

வாதி தரப்பு சாட்சி வா.சா.3 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. பாஸ்கரன் | த/பெ: நடராஜன் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 17.04.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதிக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். கொரோனா காலத்திற்கு பின்பு தாவா பற்றி தெரிந்துக்கொண்டேன். எனது தகப்பனார் நடராஜன் கையொப்பம் போட்டதை நான் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எனது தகப்பனார் கையெழுத்து எந்த இடத்தில் உள்ளது என்றால் அந்த ஆவணத்தில் என் தகப்பனார் கையெழுத்து இல்லை. எனது தகப்பனார் கையொப்பம் போட்ட ஆவணம் இதுநாள் வரை என்னிடம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை என்னிடம் காட்டினால்தான் எனது தகப்பனாரின் கையொப்பத்தை அடையாளம் காட்ட இயலும் என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியும். நான் அசல் ஆவணத்தை பார்க்காமல் முதல்விசாரணையில் உள்ள கையெழுத்து என் தகப்பனாருடையது என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் என் தகப்பனார் கையொப்பம் போட்டதை பார்த்ததாக தான்

சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் என்னால் எனது தகப்பனாரின் கையெழுத்தை அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல. உயிலின் அசல் ஆவணம் என்ன ஆவணம் என்று நான் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் சாட்சியமளிக்க வந்தபோதும் அசல் உயில் என்னவாயிற்று என்று கேட்டேனா என்றால் கேட்டேன். எனது சித்தப்பா பெயர் தெட்சிணாமூர்த்தி. 15.04.1974 ல் உயில் எழுதப்பட்டது. உயிலை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. உயில் பதிவு செய்யப்பட்டது. உயிலுக்கு பதிவு கட்டணம் யார் செலுத்தினார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. நான் பாண்டிச்சேரியில் அரசு அலுவலகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் உயில் எழுதியதாக சொல்லும் காலத்தில் நான் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உயில் எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 15.04.1974 ல் திருவாரூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டது. 15.04.1974 அன்று ஆறுமுகம் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தாரா என்றால் ஆமாம். நான் சொல்லும் தேதியில் உயில் ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இல்லை என்பதால்தான் உயில் எங்கு எழுதப்பட்டது, எங்கு பதிவு செய்யப்பட்டது என்ற அடிப்படை காரணமே தெரியவில்லை என்றால் சரியல்ல. உயிலை பற்றி எந்த விவரமும் தெரியாது என்பதால்தான் பதிவு செய்த விவரம் கூட என்னால் சரியாக சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் எத்தனை தெட்சிணாமூர்த்தி உள்ளார்கள் என்றால் உயில் எழுதிவைக்கப்பட்டவரும், சாட்சி கையொப்பம் போட்டவரும் தெட்சிணாமூர்த்தி ஆவார்கள். அசல் உயிலை பார்க்காமல் எழுதிவைத்தவரின் கையொப்பத்தையும், சாட்சிகளின் கையொப்பத்தையும் என்னால் அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை எழுதும் போது நான் உடனிருந்த நிலையில் நான் ஏன் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் என் தகப்பனார் சாட்சி கையொப்பம் போட்டார், அதனால் நான் போடவில்லை. ஆறுமுகம் தெட்சிணாமூர்த்தியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு நான்கு பெண்வாரிசுகள், மூன்று ஆண்வாரிசுகள் ஆவார்கள். ஆறுமுகத்தின் வாரிசுகளுக்கு உயில் எழுதிவைக்காமல் சகோதரருக்கு உயில் எழுதிவைக்க

என்ன காரணம் என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. மகன்கள் மூவரும் மைனர் என்பதால் சகோதரர் பெயரில் எழுதப்பட்டது. ஆறுமுகத்தின் மகன்கள் மைனர்கள் என உயிலில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் உயிலில் ஆறுமுகத்தின் வாரிசுகள் மைனர்கள் என காட்டப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தெளிவாக இல்லாததால் என்னால் படித்து கூற இயலவில்லை. ஆறுமுகம் நல்ல மனநிலையில் உயில் எழுதிவைத்ததாகவும் சாட்சிகள் ஆறுமுகம் முன்னிலையிலும் ஆறுமுகம் சாட்சிகள் முன்னிலையிலும் கையொப்பம் போட்டதாக நான் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உயில் எழுதும்போது உடனிருந்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உயில் எழுதும் போது உடனிருந்திருந்தால் நானும் சாட்சி கையொப்பம் போட்டிருப்பேன் என்றால் என் தகப்பனார் போட்டதால் நான் போடவில்லை. உயிலில் ஆறுமுகம் கையொப்பம் போடவில்லை, இடது கை பெருவிரல் ரேகை வைத்தார். உயிலில் ஆறுமுகத்தின் ரேகையை யார் பூர்த்தி செய்தார்கள் என்ற விவரத்தை வா.சா.ஆ.2 ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். வாதி எனது சித்தப்பா மகன் ஆவார். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.